DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 43 / 2025 |
| Deposition of witness | : | P.W – 10 |
| Name | : | கோபாலகிருஷ்ணன் |
| Father's /Husband Name | : | ஜெகநாதன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 59 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 09th day October, 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.01.2025-ம் தேதி காலை 09.00 மணியளவில் நன்னிலம் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வம் என்பவரிடம் கண்ணன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதற்கு மனு எண்.14/25 என கொடுத்து நன்னிலம் காவல் நிலைய குற்ற எண். 11/2025, சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.01.2025-ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகானந்தம், காத்தமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேன். அவை முறையே **அ.சா.ஆ.8** மற்றும் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான ரமேஷ்குமார் என்பவரை 13.01.2025-ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நெம்மேலி பிள்ளையார்கோவில் அருகே இருந்தவரை அடையாளம் கண்டு பின்பு காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்பு காயமுற்ற அ.சா.1–க்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் அர்ச்சனா, கியூபர்ட், மணிகண்டன் ஆகியோர்களை விசாரித்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று வந்தேன். மருத்துவரை விசாரித்து சான்று பெற்ற வகையில் அ.சா.1–க்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 296(b), 118(1), 351(3) BNS லிருந்து 296(b), 118(2), 351(3) BNS ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கினை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

இவ்வழக்கில் புகார்தாரர் புகார் மனு அளித்தாரா அவரிடம் வாக்குமுலம் பெறப்பட்டதா என்றால் அவரிடம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டது. புகார் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் மனு ஏற்பு ரசீது ஏன் வழங்கப்பட்டது என்றால் உறவினர் என்பதால் சமரசம் பேசுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் உடனடியாக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டது. மனுவில் விசாரணை நடத்திய பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்று பெயர்கள் குறிப்பிடப்பட்டதா என்றால் தெரியும் என்று பெயர் குறிப்பிடவில்லை ஆனால் முருகேசன் மகன் மனோகர் ஓடி வந்து தடுத்ததாக அவரது பெயரை குறிப்பிட்டுள்ளார். வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள வீடுகளில் வசிப்பவர்களை இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளதா என்றால் விசாரிக்கப்பட்டுள்ளது. நான் வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கட்டையை கைப்பற்றினேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் எக்ஸ்ரே பதிவை கைப்பற்றி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மருத்துவரிடம் அ.சா.1 எத்தனை நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் இரண்டு நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார். அந்த இரண்டு நபர்கள் தொடர்பாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஆண் நபர் தாக்கியதால் காயம் ஏற்பட்டதா அல்லது பெண் நபர் தாக்கியதால் ஏற்பட்டதா என்றால் அ.சா.1 க்கு காயம் எதிரி தாக்கியதால் தான் மட்டுமே

ஏற்பட்டது. எனது விசாரணையில் சம்பவத்திற்கு என்ன காரணம் என்று தெரியவந்தது என்றால் எதிரியின் தாயாரை அருகில் வசிப்பவர்கள் பராமரித்ததால் பகை ஏற்பட்டது. எதிரி அவரது தாயாருக்கு மகனாக இருக்கும் நிலையில் அ.சா.1 எதிரியின் தாயாருக்கு கழிவரை கட்டிக்கொடுத்தார் என்றால் எதிரி அவரது வீட்டு கழிவரையை பராமரிக்க கூடாது என்று அவரது தாயாரை புறக்கணித்ததால் அ.சா.1 உதவி செய்ததால் விசாரணையில் தெரியவந்தது. புகார்வாக்குமூலம் பெற்று நான்கு நாட்களுக்கு பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாதி கொடுத்த புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.10.11 13:04:00 +0530